செ.வெ.எண்: 919/2017 நாள்:06.12.2017

**கன்னியாகுமரி மாவட்டத்தில் ஓகி புயலால் பாதிப்படைந்த பகுதிகளை பார்வையிட்டு நிவாரண பணிகளை மேற்கொள்ள பொறுப்பு அதிகாரிகளாக ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒவ்வொரு அரசு செயலர் நியமனம்.**

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை கூடுதல் தலைமைச் செயலர், திரு.ஹான்ஸ் ராஜ் வர்மா,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

----

கன்னியாகுமரி மாவட்டத்தில் ஓகி புயலால் பல்வேறு இடங்களில் மரங்கள் விழுந்ததில் மின்கம்பங்கள் மற்றும் சாலைகள் சேதமடைந்தது. இவற்றை சீரமைக்க மாவட்ட நிர்வாகத்தின் சார்பாக பல்வேறு குழுக்கள் அமைக்கப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தது. மேலும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, இப்பணிகளை துரிதப்படுத்திட செயலர்கள் மற்றும் கண்காணிப்பு அலுவலர்கள் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு வருகை தந்து புயல் நிவாரணப் பணிகளை துரிதப்படுத்தி வருகின்றனர்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் ஓகி புயலால் ஏற்பட்ட சேதங்களை கண்காணிக்க 9 ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஒவ்வொரு அரசு செயலர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள். அகஸ்தீஸ்வரம், ஊராட்சி ஒன்றியத்திற்கு திருமதி.ஜோதி நிர்மலா சாமி, இ.ஆ.ப, அவர்களும், தோவாளை, ஊராட்சி ஒன்றியத்திற்கு முனைவர். ராஜேந்திரகுமார்,இ.ஆ.ப., அவர்களும், இராஜாக்கமங்கலம், ஊராட்சி ஒன்றியத்திற்கு திரு.கே.பாஸ்கரன்,இ.ஆ.ப., அவர்களும், குருந்தன்கோடு, ஊராட்சி ஒன்றியத்திற்கு திரு.ககன்தீப்சிங் பேடி,இ.ஆ.ப., அவர்களும், கிள்ளியூர், ஊராட்சி ஒன்றியத்திற்கு திரு.கே.கோபால்.இ.ஆ.ப., அவர்களும், தக்கலை, ஊராட்சி ஒன்றியத்திற்கு T.K. ராமச்சந்திரன்,இ.ஆ.ப, அவர்களும், திருவட்டார், ஊராட்சி ஒன்றியத்திற்கு திரு.ஜி.பிரகாஷ்,இ.ஆ.ப., அவர்களும், மேல்புறம், ஊராட்சி ஒன்றியத்திற்கு திரு.பி.சந்திரமோகன்,இ.ஆ.ப, அவர்களும், முஞ்சிறை, ஊராட்சி ஒன்றியத்திற்கு திரு.வி.பி.தண்டபாணி,இ.ஆ.ப., அவர்களும் பொறுப்பு அதிகாரியாக நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள்.

மேலும், மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழக தலைவர் திரு.எம்.சாய்குமார்,இ.ஆ.ப., அவர்கள் மாவட்டம் முழுவதும் மின் விநியோகம் சீரமைக்கும் பணிகளையும், வனத்துறை அரசு முதன்மைச் செயலர் திருமுகம்மது நசீமுதின் ,இ.ஆ.ப., அவர்கள், மாவட்டம் முழுவதும் வனப் பகுதிகளில் சீரமைக்கும் பணிகளையும் ஆய்வு செய்வார்கள்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி.